உ

சிவமயம்.

தெய்வப்புலமைக்கம்பர்
திருவாய்மலர்ந்தருளிய

சரஸ்வதியந்தாதிமூலமும்,

இதற்குத்
திருவநந்தபுரம்
சர்வகலாசாலைத்தமிழ்வித்வான்
சி - சாமிநாததேசிகரவர்கள்
மாணாக்கருளொருவரும்
திருநெல்வேலி
தடிவீரையன்கோவிற்றெரு
சங்கரலிங்கம்பிள்ளையவர்கள்
குமாரருமாகிய
முத்தையபிள்ளையவர்கள்
செய்த

தெளிபொருள்விளக்கப்பொழிப்புரையும்,

ஷை தெரு
கால்வாய்-முத்தையபிள்ளையவர்கள்
குமாரர்
நல்லபெருமாள்பிள்ளையால்

கலாரத்நாகரம் என்னும்
அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டன.

சென்னபட்டணம்:
1875ஆ
நவம்பர் மீ.

உ

சிவமயம்.

சிறப்புப் பாயிரம்.

திருவநந்தபுரம் மகாராஜா அவர்கள்
சர்வகலாசாலைத் தமிழ் வித்வான்
சி. சாமிநாததேசிகரவர்கள்
இயற்றிய
நேரிசை ஆசிரியப்பா.

சீர்பெறு புவியிற் சென்னிநா டதனில்
திகழ்திரு வழுந்தூர் புகழ்பெறத் தோன்றி
ஆதி யிலக்கிய விலக்கண வருங்கடல்
பருகிப் பாவலர்ப் பைங்கூழ் செழிக்க
இடைவரு மிராம னிணையில் காதை
எனுமழை பொழிந்த வெழிலிக் கம்பர்
பொருளைத் துறைவன் கருணை யருமல்
தெய்வப் புலமை மெய்ம்மை விரிக்க
உற்ற சூடக மற்றது தெரிக்கவும்
எண்ணி யியற்றிய விலக்கண மேற்கோள்
சரஸ்வதி யந்தா திக்குத் தெளிபொருள்
விளக்கப் பொழிப்புரை விரித்தெழு தினனால்
வானளந் திடுவான் வயங்க வோங்கிய
பன்னிலை யமைந்த பளிங்குமா ளிகையின்
நாற்றிசை புகழு நலநிறை நவமணி
எல்லொளி நாண விலங்குதல் செயலில்
பூமக ளுமகள் புலோமசை பூருநா

அகலத் தேற்றோ ராதிய ரடைதலில்
நால்வாய் நாற்கோட் டொருகரி யதுவும்
தோலடி யரத்தத் தூய்வா யஞ்சமும்
செஞ்சிறைக் குறுமூக் கொருபெருங் குருகும்
என்றினன் முதலோ ரொண்ணுறு மூர்தியும்
தோரணத் திடையிற் சிக்கவந் நீழல்
எழிலுரு வாய வின்மொழிச் சிறுமியர்
இரவும் பகலு மியற்றிய கோலம்
என்னப் பொலியு மிணையில் வீதிசூழ்ந்
தெல்லையி னல்லுயிர்க் கொல்லையி னருள்வான்
கண்ணுதற் பெருமான் கலந்துவீற் றிருக்கும்
திருநெல் வேலியிற் சிறந்தோர் துதிக்கச்
சங்கர லிங்க வரோதயன் றவத்தில்
தோன்றி நற்புகழ் தோமிலா துயர்ந்த
குலந்தவம் வாய்மை குணங்கமை மேன்மை
அன்பறி வொழுக்க மாசில் கல்வி
வேண்டுவ வெவைக்கும் விளங்குமா லயமாய்
நீண்ட முகிற்கொடை நேர்மை
பூண்டமுத் தைய புலமை யோனே.

திருவநந்தபுரம் சர்வகலாசாலை
உதவித்தமிழ்வித்வான்
சாமிநாதபிள்ளையவர்கள்
பாடிய
ஆசிரியவிருத்தம்.

சீர்கொண்ட முத்தொழிலி னுதித்த னித்தொழில்
செய்பவன் முகமலர்ந்து

செப்புமறை வடிவமாய் மெய்ப்புய லருட்கயல்
சேர்வள்ளி மதிவதனமின்
வார்கொண்ட பூண்முலை வல்லியமுதச் சொல்லி
வடிவழகி யந்தாதியை
மன்ஜனகன் முன்பெற்ற பொன்ஜனகி யைப்புணர்
மனுராம தனுவீரனே
போர்கொண்ட மகிமையொடு தொண்டர்துயர் தீர்த்திடும்
புதுமையும் புகழ்கம்பரோ
புகல வகிலமுமுய்ய நெல்வேலி முத்தையன்
போதமெய்ஞ் ஞானத்தினல்
பேர்கொண்ட விரியுரைச் சொற்பொரு ணயங்கண்டு
பிறைசூடி புலவர்மன்றுள்
பெம்மானு மாநந்த நடனம் புரிந்திடிற்
பேசவெளியேற் கரிதரோ.

ஷ சர்வகலாசாலை
காலிஜ்வகுப்பு மாணுக்கர்கள்
சிறப்புப்பாயிரங்கள்.

பே - சுந்தரம்பிள்ளையவர்கள்
பாடிய விருத்தம்.

அற்றைநாட் கம்ப னருள்சரஸ் வதியந் தாதிக்கு முத்தைய மேலோன், இற்றைநா டௌிவாய்ப் பொழிப்புரை யொன்றை யியற்றினு னெனப்பலர் வியப்பார், முற்றுநா முணரில் சங்கர லிங்க முயன்றதோர் தவப்பய னதனுல், வெற்றிசே ரவனே மதலையாய் வந்து விளம்பிய துண்மையா மாதோ.

சிந்துபூந்துறை
மங்களலிங்கம்பிள்ளை குமாரர்
நவநீத கிருஷ்ணபிள்ளையவர்கள்
பாடிய விருத்தம்.

தண்ணிளந் திங்க டவழ்மணி யாடத் தடந்தெரு விளங்கு நெல் வேலி, புண்ணியம் புரிசங் கரலிங்க முகிறன் புதல்வனு முத்தைய வள்ளல், விண்ணுறை விபுதர் நாவிரித் துரைக்கு மிகுபுகழ்க் கம்பர்செய் தருளும், திண்ணிய பொருள்சேர் சரஸ்வதி யந்தா திக்குரை வகுத்தனன் மாதோ.

திருநெல்வேலி
வேணுவனலிங்கம்பிள்ளை குமாரர்
கிருஷ்ணபிள்ளையவர்கள்
பாடிய விருத்தம்.

சீர்தருபூம் பொழில்சூழ்ந்த நெல்வேலி யெனுநகரிற் சிறப் புற் றோங்கும், தார்புனைசங் கரலிங்க வேடருமோர் தவமைந் தன் றகைமுத் தையன், பார்புகழ்சேர் கம்பனருள் சரஸ்வதி யந் தாதியினுட் பாடல் முற்றும், நேர்மையுறக் கற்றுணர்ந்து விசேடமுடன் பொழிப்புரையை நிகழ்த்தி னனல்.

ஸ்ரீவில்லிபுத்தூர்
மணிமுத்துப்பிள்ளை குமாரர்
தையல்பாகம் பிள்ளையவர்கள்
செய்த விருத்தம்.

உலகுபுகழ் கம்பனருள் சரஸ்வதியந் தாதிதனக் குரைத்தா னன்றாய், இலகுதெளி பொருள்விளக்கப் பொழிப்புரையை நறு மணம்பொன் னிணர்க்கீந் தாங்கு, நலமிகுநெல் வேலியு

றை சங்கரலிங் கேந்திரனருள் நாவலோர்க்குள், திலகமென வந்துதித்த முத்தைய னென்னும்வளர் சீர்மை யோனே.

திருவநந்தபுரம்

திரவியம்பிள்ளையவர்கள் குமாரர்

முத்துக்குமாரசுவாமியா பிள்ளையவர்கள்

பாடியவிருத்தம்.

பங்கய மலரிற் சங்கின முறங்கும் பண்ணைக ணண்ணுநெல் வேலிச், சங்கர லிங்க மாமுனி யுதவுந் தகைமைசேர் முத்தைய செவ்வேள், அங்கவிக் கம்ப ருள்சரஸ் வதியந் தாதிக்குத் தெளிபொருள் விளக்கம், துங்கமாய்ச் செய்தா னென்பதோர் வியப்போ சூழவன் றனக்கது மன்னே.

பிரதேசத்தார்

சிறப்புப்பாயிரங்கள்.

கொட்டையூரில் திருவிடைமருதூர்

சோமசுந்தரதேசிகரவர்கள்

பாடிய விருத்தம்.

ஒல்லையி லுயிர்கட் கிரங்கிவள் ளுவரா யுற்றய னுரைதிருக் குறட்குத், தொல்லையிற் பரிமே லழகர்செய் யுரைபோற் சூழ்ந் ததி வுணர்துதித் தேத்த, எல்லையில் புகழ்சேர் கம்பர்செய் தருளு மிருஞ்சரஸ் வதியந்தா திக்கு, நெல்லைமா நகர்வாழ் முத்தைய தாரு நிகழ்த்தினு னேருரை மாதோ.

சிறப்புப்பாயிரம்.

நாகபட்டணம்ஜில்லா

நன்னிலம்ஸ்கூல்

இரண்டாவது உபாத்தியாயர்

அரித்துவாரமங்கலம்

சோமசுந்தரதேசிகரவர்கள்

பாடிய

நிலமண்டில ஆசிரியப்பா.

மெச்சிய புகழ்சேர் நச்சினர்க் கினியரும்
வளம்பெறு கேள்வி யிளம்பூ ரணரும்
உரிய தவத்துப் பரிமே லழகரும்
உள்ளுற வுரைக்குந் தெள்ளியோ ரெங்கெனில்
மலைமகட் கோர்புறம் வரைவறத் தருபொன்
சிலைமலி கரத்துச் செம்மல்வீற் றிருக்கும்
நெல்லையம் பதியில் நீண்டவாழ்க் கையன்
சங்கர லிங்கவே டவ்த்திற் றந்த
முத்தைய னென்னு மூதறி வுடையோன்
கவிச்சக் கிரவர்த்திக் கம்பர் கழறிய
சரஸ்வதி யந்தா திக்குத் தரணியோர்
விரும்பத் தெளிபொருள் விளக்க மெனப்பெயர்
புனைத்தோ ருரைபின் பொறிப்பனவ் வுரைமுன்
நம்முறை யுலகின் நானில முழுவதும்
பரந்தன வின்மைய வாக்குதல் பாரமென்

றெண்ணி யுரையா சிரியர்க ளெவரும்
அன்னோன் முன்செலா தகற னன்றென
முக்கா லமுமுணர் தக்க வறிவில்
கருதிக் கரந்தன ரென்பர்கற் றோரே.

புதுக்குறிஞ்சி
பிஸாவீல்வ குமாரர்

ஊ கோண் டி வீ ல் வ

செய்த வெண்பா.

காரார் பொழினெல்லைச் சங்கரலிங் கந்தந்த
பேராரு முத்தைய பிள்ளையென்போன்—சீரார் எ.
சரஸ்வதிபந் தாதிக்குத் தந்துரைசெய் தான்மேல்
பாரசுமறி வாலாய்ந்து பார்.

உ

சிவமயம்.

கம்பர் திருவாய்மலர்ந்தருளிய

சரஸ்வதியந்தாதி.

காப்பு.

வெண்பா.

ஆய கலைக ளறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கு மென்னம்மை — தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

(கருத்துரை.) தாமெடுத்துக்கொண்ட இலக்கியம், இடையூறடையாமல் நிறைவேறும்பொருட்டுத் தெய்வவணக்கங் கூறுகின்றார்.

(பொழிப்புரை.) முதலாசிரிய னிடத்தினின்று தோன்றிய அக்கரவிலக்கணம், இலிகிதம், கணிதம், வேதமுதலாகிய கலைஞானங்க ளறுபத்துநான்கையும், திரிகரண சுத்தியாகத் தன்னை வழிபடு மடியார்களுக்கு, பசுமரத்திற் றைத்த ஆணிபோல அவர்க ளுள்ளத்திற்பதிய அருளி, தனது பரம்பரை விளங்கச் செய்கின்ற உலகமாதாவாகியும், பரிசுத்தமாகிய வுருவத்தினால் படிகத்தினை யொத்தவளாகியு முள்ள சரஸ்வதி தேவியானவள் எளியனாகிய எனது இருதயகமலத்தில் எழுந்தருளியிருப்பாள் (ஆதலால்) அறிவைமயக்கும் இடரணுகாது, என்றவாறு.

(பதசாரம்) "ஆய,, என்பதற்கு முதலாசிரிய னிடத்திலிருந்து தோன்றிய என்றுபொருள் எழுதியதற்குச் செய்யுள், திருவிளையாடல்.—விருத்தம். "மானமுனிவோரதிசயிப்பவடநீழல், மோனவடிவாகியமுதற்குரவனெண்ணுன், கூனமிலிலக்கணவுறுப்பகவைநானுன், கானவெருகாளைமறையோன்வடிவமாகி" இத்திருவிருத்தத்தாலும்:தர்க்கசங்கிரகம்—"மலைமகண்மணந்தவுலகினுக்கிறைவன், கலைமகளாசான்கான்மலர்வணங்கிக், கிளர்பொருட்டருக்கசங்கிரகம், இளையோருளங்கொளவியம்புவனுனையே" இவ்வாசிரியப்பாவினுலும்; கட்டளைக்கலித்துறை.—"இன்னங்கலைமகள்கைம்மீதிற்புத்தகமேந்தியந்தப், பொன்னம்பலந்தன்னிற்புக்கிருந்தாளென்னபுண்ணியமோ, கன்னன்களந்தைக்கவிவீரராகவன்கச்சியிலே, தன்னெஞ்சமேடெனக் கற்றுனெருமுத்தமிழையுமே" இதனுலுமுணர்க; விருத்தம். "புத்தகம்படிகமாலை குண்டிகை பொருள்சேர்ஞான, வித்தகந்தரித்தசெங்கைவிமலையையமலைதன்னை, மொய்த்தகொந்தளக பாரமுகின்முலைத்தவளமேனி, மைத்தகுகருங்கட்செவ்வாயணங்கினைவணங்கல்செய்வாம்" என இந்நூலாசிரியர் இராமாயணப்பாயிரக்கவியிற் கையிற் புத்தகத்தைக்காட்டிய ஏதுவினுலுமறிக.

உலகில் கல்வி பலவகைப்படும். அங்ஙனம் வழங்கப்படும் பலவகைக்கல்வியையு மடக்கிச்சொல்வார், கலைக ளறுபத்துநான் கென்றதே யமையாதெனக்கருதி, தெய்வட்புலமைக்கம்பர் முற்றும்மைகொடுத்து முடித்தார். "கலை" இதன்பொருள் 'பங்கு' அது "கலா" என்பதின்திரிபு. "அம்மை" என்பது "அம்பா" என்பதின் திரிபு. "உள்ளம்" என்பது தொழிற்பெயர். (க)

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்—துடியிடையும்

அல்லும் பகலு மனவரத முந்துதித்தால்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

(பொ-ரை.) பளிங்குபோன்றசாயையையும், பவளம்போன்ற வாயையும், பரிமளம் வீசுகிறதாமரைபோன்ற அபயாஸ்தத்தையும், உடுக்கையி னிடையையொத்த இடையையுமுடைய சரஸ்வதிதேவியை, இரவிலும், பகலிலும், மற்ற எந்தநேரங்களிலும் தியானித்தால், கல்லுங் கவிசொல்லும் (எ-று.)

(ப-ம்.) "அனவரதம்" என்றது அந்திசந்திகளை. மனம், வாக்கு, காயம், ஒத்துத்துதித்தலருமையென்பதுபட "துதித்தால்" எனவருங்காலத்தாலும், அங்ஙன மொத்துத்துதித்தோர், அறியுமறிவு சிறிதுமிலராயினும், கவிசொல்லுதல் எளிதென்பதை வற்புறுத்துவார். "கல்லும்" என இழிவுசிறப்பும்மை கொடுத்துங் கூறினர். இங்கு "கல்" என்றது "மந்தபுத்தியுடையோனை" அது நன்னூல் "உவப்பினுமுயர்வினுஞ் சிறப்பினுஞ்செறலினு, மிழிப்பினும்பாறிணை யிழுக்கினுமியல்பே" என்ற சூத்திரவிதியின்படி வெகுளியால்வந்த மரபுவழுவமைதி ஓகாரம் வினுப்பொருளது "கல்லுங்கவிசொல்லும்" என்பதற்கு. பெரியபுராணம். திருவிருத்தம். "அந்நிலையேயுயிர்பிரிந்தவான்கன்றுமவ்வரசன், மன்னுரிமைத்தனிக்கன்றுமந்திரியுமுடனேழலும், இன்னபரிசானுனென்றறிந்திலன்வேந்தனும்யார்க்கும், முன்னவனேமுன்னின்முன்முடியாதபொருளுளதோ." "துரும்புபடைத்தழிக்குமகிலாண்டத்தொகுதியையே" இங்ஙன மருள்வாக்குகளிருப்பதால் கல்லுங் கவிசொல்லுமெனச் சொன்னுரொனினுமமையும்.

நூல்.

கட்டளைக்கலித்துறை.

சீர்தந்த வெள்ளிதழ்ப் பூங்கமலாசனத் தேவிசெ ஞ்சொல், தார்தந்த வென்மனத் தாமரையாட்டிச் சரோருகமேல், பார்தந்த நாத னிசைதந்த வாரணப் பங்கயத்தாள், வார்தந்த சோதியம் போருகத்தாளை வணங்குதுமே.

(பொ-ரை.) கண்டோர்விரும்ப, அழகுநிறைந்து, வெண்மை பொருந்தி, இதழ்களடர்ந்து, பொலிவுமிகுந்த தாமரைப்பூவை ஆசனமாகவுடைய தேவி (அவ்வாசனம்போலவே) தன்னிடத்து அன்புமிகுதியால் செவ்வியபாமாலை புனைந்த எனது பாபபுஞ்சமாகிய மனத்தாமரையை ஆளுகின்றவள், திருமாலினுந்தித் தாமரையிலுதித்து அண்டபிண்டசராசரங்களைப் படைக்கின்ற பிரமதேவனுக்குக் கீர்த்தியைக்கொடுத்த வேதமாகிய தாமரையின்கண் வீற்றிராநின்ற சரஸ்வதிதேவியினுடைய நீண்ட பிரகாசமுள்ள தாமரைமலர்போன்ற திருவடிகளை யாம் வணங்குவோம் (எ று.)

“இசைதர்த” என்பதை “பங்கயத்தாள்” என்பதிேனாடு கூட்டுக.

(ப-ம்.) இந்நூல் கற்கப் புகுவோர்களுக்கு மங்கள முதன்மொழியறிவிப்பார். “சீர்தந்த” என்றும், பூங்கமலம், ஆரணபங்கயம், இவ்விரண்டு புஷ்பங்களினும் இதயகமலமே விசேடமென்பதுதோன்ற அதனை அவ்விரண்டிற்கு மிடையில்வைத்தும், அவ்விரண்டிலும் வீற்றிருப்பதிலும் இதில் வீற்றிருக்க மிகவும் விருப்பமுடையவளென்பது தோன்ற “ஆட்டி” என்றும், தன்கணவனிலும் தானே யுயர்ந்தவளென்பார் அழியுர்தன்மை

புள்ள பார்முதலாகிய பஞ்சபூதங்களைத் தந்தவனுக்கு அழியாத்தன்மையுள்ள இசைதந்தவளென்றும், அஞ்ஞானவிருள் சூழ்ந்தாலும் அதனை அபாவமாகச்செய்யும் என்பார். "வார்தந்த சோதியம்போருகத்தாள்" என்றும் சொல்லினர். கமலம்=நீரை அலங்கரிப்பது. தாமரசமென்பதின்திரிபுதாமரை=விசேஷரசமுள்ளது. சரோருகம்=ஓடையில்முளைப்பது அல்லது செந்தாமரை. பங்கயம்=சேற்றில்முளைப்பது. அம்போருகம்=நீரில்முளைப்பது. இவ்வைந்தும் ஒருபொருளவாய் வந்ததினால் "பொருட்பின்வருநிலையணி". "திவ்" இதன்பொருள் பிரகாசம், விளையாட்டு, முதலியபலவுமாம்: இதிலிருந்தே, தேவன், தேவி, திவா, திவி; தோன்றின. "வணங்குதும்" தன்மைப்பன்மைவினைமுற்று. (௧)

வணங்குஞ் சிலைநுத லுங்கழைத்தோளும் வனமுலைமேல், சுணங்கும் புதிய நிலவெழுமேனியுந் தோட்டுடனே, பிணங்குங் கருந்தடங் கண்களுநோக்கிப் பிரமனன்பால், உணங்குந் திருமுன்றிலாய் மறைநான்கு முரைப்பவளே.

(பொ-ரை.) நாணேற்றிய வில்லையொத்த புருவத்தினையும், பசிய மூங்கில்போன்ற தோள்களையும், அழகிய கொங்கைமேற்படர்ந்த பொற்றேமலையும், புதுமைதங்கிய சந்திரப்பிரபையையொத்து ஒளிவீசாநின்ற சரீரத்தையும், கர்ணபூஷணங்களோடு தமக்கு வழிவிடாமையைக் குறித்துப் பிணங்குகின்ற கறுத்து விசாலம்பொருந்திய கண்களையும், பிரமதேவன் விருப்பத்தால் பார்த்துப்பார்த்துக் கூடல் கிடைக்கவேண்டுமேயென்று ஏங்கி வாடித்திரிகின்ற அழகிய முற்றத்தையுமுடையாளே, நான்குவேதங்களையும் போதிக்கப்பட்டவளே (எ-று.)

இக்கவியில் பயன் எஞ்சியது. வேண்டும்பயனைக் கேட்டுக் கொள்க.

(ப-ம்.) பிரமன்—விர்த்தியடைந்தவன். "அன்பு" பண்புச் சொல். "முன்றில்" இலக்கணப்போலி. "மறை" முதனிலைத் தொழிற்பெயர். மறைநான்கு—அவையாவன இருக்கு, தைத்திரியம், சாமம், அதர்வணம். அன்றியும் பொதுப்பட மறை நான்கென்றதனுல் ஆயுள்வேதம், அருத்தவேதம், தனுர்வேதம், காந்தருவவேதம் ஆகிய இந்த உபவேதங்களைக் கொள்ளினும் இழுக்காது. (உ)

உரைப்பா ருரைக்குங் கலைகளெல்லாமெண்ணி லுன்னையன்றித், தரைப்பா லொருவர் தரவலரோதண் டரளமுலை, வரைப்பா லமுதுதந் திங்கெனைவாழ்வித்த மாமயிலே, விரைப்பா சடைமலர் வெண்டாமரைப்பதி மெல்லியலே.

(பொ-ரை.) குளிர்ச்சிபொருந்திய முத்துமாலையணிந்த கொங்கையாகிய வரையினின் றெழுகாகின்ற பாலாகிய அமுதத்தைத்தந்து, இவ்வுலகத்திலென்னை நீடித்து வாழும்படிசெய்த பெருமைபொருந்திய மயிலையொத்த சாயையுடையவளே! வாசனைபொருந்திப் பசிய இலையோடுவிளங்கிய வெண்டாமரையாகிய வீட்டி லெழுந்தருளிய மெல்லிய நடைவாய்ந்த சரஸ்வதியே, பிரசங்கிக்கப் பட்டவர்கள் புகழ்ந்துசொல்லுகின்ற அறுபத்துநான்கு கலைஞானங்களிலும் சொல்லிய தெய்வங்களின் குணங்களை மதிப்பிட்டறியுங்கால் உன்னையன்றி இப்பூவுலகத்தின்கண் கொடுப்பவர் ஒருவராகினு முண்டோ (எ-று.)

இல்லையென்பது இசையெச்சம். "எல்லாம்" என்பதைச் செயப்படுபொருளாக்கினு மிழுக்காது.

(ப-ம்.) ஓகாரம் எதிர்மறைப்பொருளது. வினாவெனினு மமையும். "முலைவளை" இருபெயரொட்டுப் பண்புத்தொகை. மயில், இயல், ஆகுபெயர்கள். அமுதம், "அமிர்தம்" என்பதின் மரூஉ. "பாசடை" நன்னூல் "ஈறுபோதலிடையுகரமிய்யாத, லாதிநீடலடியகரமையாத, றன்னொற்றிரட்டடன்முன்னின்ற மெய்திரித, லினமிகலினையவும் பண்பிற்கியல்பே" என்றபடி. (பசுமை+அடை) பாசடை என்றாயிற்று. (௩)

இயலா னதுகொண்டு நின்றிரு நாமங்க ளேத்துதற்கு, முயலாமை யாற்றடு மாறுகின்றே னிந்த மூவுலகும், செயலா லமைத்த கலைமக ளேநின் றிருவருளுக், கயலா விடாம லடியே னையுமுவந் தாண்டருளே.

(பொ-ரை.) இலக்கணத்தேர்ச்சியா லுன்னுடைய திருநாமங்களைச் சொல்லித் துதிப்பதற்கான தவத்தைமுன் சென்மத்தில் முயற்சிசெய்யாமையினாலே இப்பிறவியிலதற்குவகை தெரியாமல் தடுமாற்றமடைகின்றேன். இந்தச் சொர்க்கமத்திய, பாதாளம் என்ற மூவுலகங்களையும் ஒழுக்கத்தாலுண்டாக்கிய கலைஞானங்களுக்குத் தலைவியே, உன்னுடைய கிருபாவிலாசத்திற் கன்னியனுக்காது அறிவிற்சிறிய அடியேனாகிய என்னையுஞ் சந்தோஷித்து ஆளவேண்டும் (எ-று.)

(ப-ம்.) "இயல்" எனப் பொதுப்படக்கூறியதனால் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, இவ்வைந்திலக்கணமுங் கொள்க. "திருநாமங்கள்" எனப் பன்மையாய்க்கூறியதனால், இசைமடந்தை, உலகமாதா, காயத்திரி, சாவித்திரி, ஞானமூர்த்தி, நாமகள், பாமகள், பாரதி, வாணி, முதலிய பலவுமெனக்கொள்க. "தடுமாறல்" என்பது "சந்தேகவிபரீதங்களால்"என்க. ()

இக்கவியில் பயன் எஞ்சியது. வேண்டும்பயனைக் கேட்டுக் கொள்க.

(ப-ம்.) பிரமன்=விர்த்தியடைந்தவன். "அன்பு" பண்புச் சொல். "முன்றில்" இலக்கணப்போலி. "மறை" முதனிலைத் தொழிற்பெயர். மறைநான்கு—அவையாவன இருக்கு, தையித்திரியம், சாமம், அதர்வணம். அன்றியும் பொதுப்பட மறை நான்கென்றதனால் ஆயுள்வேதம், அருத்தவேதம், தனுர்வேதம், காந்தருவவேதம் ஆகிய இந்த உபவேதங்களைக் கொள்ளினுமிழுக்காது. (உ)

உரைப்பா ருரைக்குங் கலைகளெல்லா மெண்ணி லுன்னையன்றித், தரைப்பா லொருவர் தரவலரோதண்டரளமுலை, வரைப்பா லமுதுதந் திங்கெனைவாழ்வித்த மாமயிலே, விரைப்பா சடைமலர் வெண்டாமரைப்பதி மெல்லியலே.

(பொ-ரை.) குளிர்ச்சிபொருந்திய முத்துமாலையணிந்த கொங்கையாகிய வரையினின் றெழுகாகின்ற பாலாகிய அமுதத்தைத்தந்து, இவ்வுலகத்திலென்னை நீடித்து வாழும்படிசெய்த பெருமைபொருந்திய மயிலையொத்த சாயையுடையவளே! வாசனைபொருந்திப் பசிய இலையோடுவிளங்கிய வெண்டாமரையாகிய வீட்டி லெழுந்தருளிய மெல்லிய நடைவாய்ந்த சரஸ்வதியே, பிரசங்கிக்கப் பட்டவர்கள் புகழ்ந்துசொல்லுகின்ற அறுபத்துநான்கு கலைஞானங்களிலும் சொல்லிய தெய்வங்களின் குணங்களை மதிப்பிட்டறியுங்கால் உன்னையன்றி இப்பூவுலகத்தின்கண் கொடுப்பவர் ஒருவராகிலு முண்டோ (எ-று.)

இல்லையென்பது இசையெச்சம். "எல்லாம்" என்பதைச் செயப்படுபொருளாக்கினு மிழுக்காது.

(ப-ம்.) ஓகாரம் எதிர்மறைப்பொருளது. வினாவெனினு ம மையும். "மூலைவளா" இருபெயரொட்டுப் பண்புத்தொகை. மயில், இயல், ஆகுபெயர்கள். அமுதம், "அமிர்தம்" என்பதின் மரூஉ. "பாசடை" நன்னூல் "ஈறுபோதலிடையுகரமிய்யாத, லாதிநீடலடியகரமையாத, றன்னொற்றிரட்டன்முன்னின்ற மெய்திரித, வினமிகலினையவும் பண்பிற்கியல்பே" என்றபடி. (பசுமை+அடை) பாசடை என்றாயிற்று. (௩)

இயலா னதுகொண்டு நின்றிரு நாமங்க ளேத்து
தற்கு, முயலாமை யாற்றடு மாறுகின்றே னிந்த
மூவுலகும், செயலா லமைத்த கலைமக ளேநின்
றிருவருளுக், கயலா விடாம லடியே னையுமுவந் தா
ண்டருளே.

(பொ-ரை.) இலக்கணத்தேர்ச்சியா லுன்னுடைய திருநாமங்களைச் சொல்லித் துதிப்பதற்கான தவத்தைமுன் சென்மத்தில் முயற்சிசெய்யாமையினாலே இப்பிறவியிலதற்குவகை தெரியாமல் தடுமாற்றமடைகின்றேன். இந்தச் சொர்க்கமத்திய, பாதாளம் என்ற மூவுலகங்களையும் ஒழுக்கத்தாலுண்டாக்கிய கலைஞானங்களுக்குத் தலைவியே, உன்னுடைய கிருபாவிலாசத்திற் கன்னியனுக்காது அறிவிற்சிறிய அடியேனாகிய என்னையுஞ் சந்தோஷித்து ஆளவேண்டும் (எ-று.)

(ப-ம்.) "இயல்" எனப் பொதுப்படக்கூறியதனால் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, இவ்வைந்திலக்கணமுங் கொள்க. "திருநாமங்கள்" எனப் பன்மையாய்க்கூறியதனால், இசைமடந்தை, உலகமாதா, காயத்திரி, சாவித்திரி, ஞானமூர்த்தி, நாமகள், பாமகள், பாரதி, வாணி, முதலிய பலவுமெனக்கொள்க. "தடுமாறல்" என்பது "சந்தேகவிபரீதங்களால்"என்க. ()

அருக்கோ தயத்தினுஞ் சந்திரோ தயமொத் த ழகெறிக்கும், திருக்கோல நாயகி செந்தமிழ்ப் பா வை திசைமுகத்தால், இருக்கோது நாதனுந் தானு மெப் போது மினிதிருக்கும், மருக்கோல நாண்ம ல ராளென்னை யாளு மடமயிலே.

(பொ-ரை.) பகலிரவென்னும் இருபோதிலு மொரோதன்மை யதாகப் பிரபை வீசாநின்ற சிறந்த திவ்வியாபரண சித்திரவஸ் திர அலங்காரமுடைய நாயகி, தன்னடியார்களுக்குச் செந்தமி ழைத் தராநின்ற பிரதிமைபோல்வாள், நான்கு முகங்களினு லும் இருக்குமுதலிய நான்கு வேதங்களையுஞ் சொல்லுகின்ற பிரமதேவனும் தானுமாக அனவரதமுஞ் சுகமாயிருக்கின்ற வாசனைபொருந்தி அழகுள்ள அன்றலர்ந்த தாமரைமலரினிடத் தெழுந்தருளியிருப்பவள், மடமயில்போன்ற சரஸ்வதிதேவியா னவள் என்னை ஆளுவாள் (எ-று.)

(ப-ம்.) அருக்கோதயம்போல நியதியாகச் சந்திரோதயமா னது ஒத்துத்தோன்றுதலின்மையது என வெளியிடுவார், அத னைப் பின்வைத்து உம்மைகொடாமலும், மிக்க அழகுமடக்கமு முடையா ளென்பார் பாவையென்றும், தன்கணவன் தன்னைப் போலத் தேர்ச்சியுடையா னென்பார், திசைமுகத்தா லிருக்கோ துநாதனென்றும், இருவரும் பரஸ்பரம் கல்விப்பிரசங்கத்திலி ருப்பார்களென்பார், இனி திருக்குமென்றும், மலரைவிட்டு நீங் காளென்பார், அதனை யுடைமைப்பொருளாக்கியுங் கூறினர். அருக்கன்=பூஜிக்கத்தக்கவன். சந்திரன்=குளிர்ச்சி செய்பவ ன், [சந்தோஷஞ்செய்பவன்.] அத்தும், உம்மையும் விகாரத்தா ல் தொக்கன. தமிழ்=இன்பம். "திசா"என்பது திசையென்றா கியது. "திசை" என்பது இலக்கணையால் நான்கு என்னும்

எண்ணை யுணர்த்தியது. இதன் பகுதி "திக்," பொருள் விசாலம். பாவை, மயில், ஆகுபெயர்கள். இருக்கு=துதி. (ரு)

மயிலே மடப்பிடி யேகொடி யேயிள மான்பிணையே, குயிலே பசுங்கிளி யேயன்ன மேமனக் கூரிருட்கோர், வெயிலே நிலவெழு மேனிமின் னேயினி வேறுதவம், பயிலேன் மகிழ்ந்து பணிவே னுனது பொற் பாதங்களே.

(பொ-ரை.) மயிலியல்போலும் இயலினையுடையாளே, இளமைபொருந்திய பெண்யானையின் நடைபோலு நடையையுடையாளே, பூங்கொடி துவளுதல்போலத் துவளுகின்ற இடையையுடையாளே, இளமைபொருந்திய பெண்மானின் மருட்சியுள்ள பார்வைபோன்ற பார்வையையுடையாளே, குயிலின் தொனிபோலும் இனியதொனியையுடையாளே, பசியகிளியின் மொழிபோன்ற குதலைமொழியுடையாளே, நாதம்பம் என்னும் அன்னம் இனிதாகப்பாடுவதுபோலப் பாடுதலையுடையாளே, அடியார்களுடைய மனத்திநிறைந்த அஞ்ஞானவிருளைப் போக்குவதினால் சூரியனைப்போன்றவளே, அடியார்கள் தெரிசனத்துக்குக் குளிர்ந்தும் பிரகாசமாயுமிருப்பதினால் நிலவொழுகின்ற மேனியையுடைய மின்னலைப்போன்றவளே, மகிழ்ந்து உனது பிரகாசம்பொருந்திய பாததாமரைகளை வணங்குவனேயன்றி அதனின் வேறாகியதவத்தை யான் செய்யேன் (எ-று.)

(ப-ம்.) தன்னையும் தன்னிடத்துள்ள பொருள்களையும் மறைப்பதினால் "கூரிருள்" என்றார். கோபம், பாபம், இவை கோவம், பாவம், என வந்ததுபோல தபம், தவம், எனவந்தது. ஈற்றிலுள்ள ஏகாரந் தேற்றப்பொருளது. சமஸ்கிருதபாஷை

யில் "காதம்பம்" என்னும் அன்னஞ்சொல்லிய "காதம்புரி" என்னிற கிரந்தமொன்றுண்டு. (சு)

பாதாம் புயத்திற் பணிவார் தமக்குப் பலகலையும்,
வேதாந்த முத்தியுந் தந்தருள் பாரதி வெள்ளிதழ்ப்
பூஞ், சீதாம் புயத்தி லிருப்பா ளிருப்பவென் சிந்தை
யுள்ளே, யேதாம் புவியிற் பெறலரி தாவ தெனக்கி
னியே.

(பொ-ை.) தன்னுடைய திருவடித்தாமரையில்வணங்கப்பட்ட அடியார்களுக்குப் பலவகையாகிய சாஸ்திரத்தேர்ச்சியையும், உபநிஷத்துக்களால் சொல்லப்பட்ட மோக்ஷத்தையுந்தந்து ரக்ஷிக்கின்ற உலகமாதா, வெண்மைபொருந்திய தளங்கள் நிரம்பி, பொலிவுமிகுந்து, குளிர்ச்சிபொருந்திய தாமரைமலரின்கண்ணே இருக்கின்றவளாகிய சரஸ்வதியானவள், என் சிந்தையினிடத்தில் குடிகொண்டிருப்பாள். (ஆதலால்) பூமியில் இனி நான் பெறுவதற் கருமையுடையதாக இருப்பது ஒன்றுமில்லையாகும் (எ-று.)

(ப-ம்.) "அறிவு" என்னும் பொருளில்வந்த "வித்" என்னும் பகுதி ஓர்வகைப் பிரத்தியஞ்சேர்ந்து அறியத்தக்கது என்னும் பொருளில் "வேத்தியம்" என்றாகி அதன்மேல் மற்றோர்வகைப் பிரத்தியஞ்சேர்ந்து "வேதம்" என்றாகியது. "வேதம்" இதன் பொருள் "அறியத்தக்கதையுடையது." இதன்பகுதியிலிருந்தே வித்துவான், வைத்தியம், முதலிய பலவும்வந்தன. "முத்தி" இதன்பொருள் "விடுபட்டது." அதாவது உலகாசையொழிந்தது. "வீடு" என்னும்மொழி முத்தியைக் குறிக்குங்காலத்தில் அதற்கும் பொருளிதுவே. பாரதி—சுமப்பவள். (எ)

இனிதா னுணர்வதெண் ணெண்கலையாளை யிலகு தொண்டைக், கனிநாணுஞ் செவ்விதழ் வெண்ணிறத் தாளைக் கமலவயன், தனிநா யகியை யகிலாண்டமும்பெற்ற தாயைமணப், பனிநாண் மலருறை பூவையை யாரணப் பாவையையே.

(பொ-ரை.) அறுபத்துநான்கு கலைஞானங்களுக்கும் தலைமையுடையாளை, விளங்காநின்ற கொவ்வைப்பழமுங்கண்டும் நாணும்படியான சிவந்த அதரங்களையும், வெள்ளிய திருமேனியையுமுடையாளை, தாமரைப் புஷ்பத்தின்கண்ணே எழுந்தருளியிருக்கின்ற பிரமதேவனுடைய பத்தினியை, சகல அண்டங்களையும் பெற்ற மாதாவை, வாசனைபொருந்தி, குளிர்ச்சிமிகுந்த புதுப்பூவில் வாசஞ்செய்கின்ற நாகணவாய்ப்பக்ஷியின் மொழியையொத்த குதலைமொழியுடையாளை, வேதத்தினிறைந்த பிரதிமைபோல்வாளை, உலகத்திலுள்ளோ ரறிந்துகொள்வது நன்மையாகும் (எ-று.)

(ப-ம்.) "ஆன்" சாரியை. செவ்விதழ் வெண்ணிறம், இவைமுரண். அருணசம்பந்தம், ஆரணம். இதன்பொருள் சூரியனைக்குறித்துச் சொல்லியது என்பதே. "பூவை" உவமையாகு பெயர். (அ)

பாவுந் தொடையும் பதங்களுஞ் சீரும் பலவிதமா, மேவுங் கலைகள் விதிப்பா ளிடம்விதி யின்முதிய, நாவும் பகர்ந்ததொல் வேதங்க ணான்கு நறுங்கமலப், பூவுந் திருப்பதம் பூவா லணிபவர் புந்தியுமே.

(பொ-ரை.) கவிகளும், அடிகளும், சீர்களும், பலபலவிதமாகப் பொருந்திய சாஸ்திரங்களை ஆத்மாக்களிடத்தி லிரங்கி

யருள்கின்ற சரஸ்வதி யெழுந்தருளியிருக்கு மிடங்கள் எவை யென்ருல் பிரமதேவனுடைய நீதியோதி முதிர்ச்சியடைந்த நாவும், மேன்மையுடையவையென்று பலருஞ் சொல்லத்தக்க பழமையாகிய நான்குவேதங்களும், மணம்பொருந்திய வெண் டாமரைமலரும், தன்னுடைய திருவடிகளைப் புஷ்பங்களால் அலங்காரஞ் செய்பவருடைய புத்தியுமாம் (எ-று.)

(ப-ம்.) பாமுதலியவைகளின் விபரங்களை "எழுதப்படுதலி னெழுத்தேயவ்வெழுத், தசைத்திசைகோடலினசையேயசையி யைந்து, சீர்கொளநிற்றலிற்சீரோசீரிரண்டு, தட்டுநிற்றலிற்றளை மேயத்தளை, யடுத்துநடத்தலினடியேயடியிரண்டு, தொடுத்தன் முதலாயினதொடையேயத்தொடை, பாவிநடத்தலிற்பாவேபா வொத், தினமாநடத்தலினமெனப்படுமே" இச்சூத்திரத்தாலறி க. "பூ" முதனிலைத்தொழிற்பெயர். "பூ" எனப் பொதுப்படக் கூறியதனுல் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ, இந்நா ன்குமெனக்கொள்க. (சு)

புந்தியிற் கூரிரு ணீக்கும் புதிய மதியமென்கோ, அந்தியிற் ருேன்றிய தீபமென் கோநல் லருமறை யோர், சந்தியிற் ருேன் றுந் தபனனென் கோமணித் தாமமென்கோ, உந்தியிற் ருேன்றும் பிரான்புயந் தோயு மொருத்தியையே.

(பொ-ரை.) மகாவிஷ்ணுவின் உந்திக்கமலத்திலுதித்த பிர மதேவனுடைய எண்புயங்களையுஞ் சேருஞ் சரஸ்வதிதேவியை, அடியார் புத்தியில்நிறைந்த அஞ்ஞானவிருளைத் துரத்துகின்ற நூதன சந்திரனென்று சொல்லவோ, சாயங்காலத்தில் தோன் றப்பட்ட விளக்கமென்றுசொல்லவோ, நன்மைநிறைந்து அரு மையறிந்த பிராமணர்கள் சந்திசெய்யுங் காலநேரத்தில் தோ

னறுகின்ற சூரியனென்று சொல்லவோ, அரதனமாலையென்று சொல்லவோ (எ-று.)

(ப-ம்.) காண்போருக்கு இனிய காட்சியதாய்க் குளிர்ந்து தோன்றுவதினால் "மதியம்" என்றும், அம்மட்டில் நில்லாது சகல அண்டங்களையுந் தான் ஒருத்தியாயிருந்து விளக்கஞ்செய்வதினால் சிறுத்திருந்தும் மிகுந்த பிரகாசத்தைக்கொடுக்கின்ற "தீபம்" என்றும், தன்னைச் சேர்ந்தவர்களுடைய பாவத்தைப் போக்குவதினால் உலகப்பொருளைப் பரிசுத்தமாக்குகின்ற "தபனன்" என்றும், எக்காலத்தும் வாடாமல் விளங்குதலால் "மணித்தாமம்" என்றுங் கூறினார். இது ஐய அணி. "என்கோ" என்பது (என்க+ஓ) என்பதின் விகாரம். (௧0)

ஒருத்தியை யொன்று மிலாவென் மனத்தி னுவந்துதன்னை, இருத்தியை வெண்கம லத்திருப்பாளை யெண் ணெண்கலைதோய், கருத்தியை யைம்புல னுங்கலங் காமற் கருத்தையெல்லாம், திருத்தியை யான்மற வேன்றிசை நான்முகன் றேவியையே.

(பொ-ரை.) ஒப்பில்லாத சரஸ்வதிதேவியை, நற்குணங்களிலொன்று மில்லாத என்னுடைய மனத்தின்கண் இருப்பவளை, வெண்டாமரைமலரினிடத்து எழுந்தருளியிருப்பவளை, அறுபத்துநான்கு கலைஞானங்களுந்தங்கிய அதிசூக்ஷ்ம புத்தியையுடையாளை, ஐம்புலன்களும் கெட்டவழியிற் செல்லவொட்டாமலிருக்கப் புத்தியைத் திருத்தினவளை, பிரமதேவன் பத்தினியை, யானொருகாலத்திலும் மறவேன் (எ-று.)

(ப-ம்.) "நற்குணம்" இருபத்து. மெய்யுரை, நல்வார்த்தை, இனியவைகூறல், பயன்படுசொல், இந்நான்கும் வாக்கின்நற்குணம்; கோயில்வலம்வரல், தவம்புரிதல், தானஞ்செயல், இம்

மூன்றும் காயநற்குணம்; அருணினைவு, ஆசையறுத்தல், தவப் பற்று, இம்மூன்றும் மனநற்குணம். புலன்=மெய், வாய், கண், மூக்கு, செவி. (கக)

தேவருந் தெய்வப் பெருமானு நான்மறை செப் புகின்ற, மூவருந் தானவ ராகியுள் ளோரும் முனி வரரும், யாவரு மேனைய வெல்லா வுயிரு மிதழ்வெ ளுத்த, பூவரு மாதி னருள்கொண்டு ஞானம் புரிகி ன்றதே.

(பொ-ரை.) வெளுத்த தளங்கள் நிறைந்த தாமரைப்பூவி லெழுந்தருளிய சரஸ்வதிதேவியின் கிருபையினாலேதான், தே வர்களும், இந்திரனும், நான்குவேதங்களிலுஞ் சொல்லியிருக் கின்ற பிரம, விஷ்ணு, ருத்திரர்களும், தானவர்களும், முனிவ ரர்களும், மற்றவர்களும், மற்றவுயிர்களும் ஞானத்தை விரும் புவதாகும் (எ-று.)

(ப-ம்.) "தனு" என்பவள் புத்திரர் "தானவர்." மனப்பரி சுத்தமுள்ளவர் முனிவர். எல்லாவுயிர்=அஃறிணையி லுயிருள் ளவை. (கஉ)

புரிகின்ற சிந்தையி னூடே புகுந்து புகுந்திருளை, அரிகின்ற தாய்கின்ற வெல்லாவறிவி னரும்பொரு ளைத், தெரிகின்ற தின்பங் கனிந்தூறி நெஞ்சந் தெளி ந்துமுற்ற, விரிகின்ற தெண்ணெண் கலைமாதுணர்த் திய வேதமுமே.

(பொ-ரை.) அக்கரையிலக்கணமுதலாகிய அறுபத்துநான்கு கலைஞானங்களுக்கும் தலைவியாகிய சரஸ்வதிதேவி அநாதிகால முதல் பிறவியாகிய சுழலிலகப்பட்டு வருந்துகின்ற ஆத்மாக்

களுய்யும்பொருட்டு அருளிய வேதமானது உலக இன்பத்தினையுடைய அவ்வாத்மாக்களினுள்ளே புகுந்து அங்கு நிறைந்திருக்கின்ற இருளின் மூலத்தையறுக்கின்றது; மேலானவிஷயத்தில் ஆராய்ச்சிசெய்கின்ற பலவழியாலு முண்டாகும் அறிவில் தோன்றும் அருமைபொருந்திய முதற்பொருளைத் தெரிவிக்கின்றது. அப்படித் தெரிவிக்கின்றதினாலே மேலான இன்பம் நெகிழ்ந்து பெருகி மனத்தினிடத்தில் தெளிந்து முழுவதும் பரவுகின்றது (எ-று.)

"தெரிகின்ற" என்பதோர் பாடபேதமுண்டு. அங்ஙனமாங்கால் "மாதுணர்த்தியகலையும்வேதமு" மெனக் கூட்டிப்பொருள்கொள்க.

(ப-ம்.) "அறிகின்றது" என்பதை "வினைமுற்றே வினையெச்சமாகலுங், குறிப்புமுற்றீரொச்சமாகலு முளவே" என்ற சூத்திரத்தால் வினையெச்சமாக்கித்தெரிகின்றது என்பதைக்கொண்டு முடிக்கினு மமையும். வேதமானது அஞ்ஞானத்தைப்போக்கிக் கடவுளைத் தெரிவிப்பதாலுண்டாகு மின்பம். மனத்தில் நிறைந்திருப்பது என்பது இதன்கருத்து. (கங)

வேதமும் வேதத்தி னந்தமு மந்தத்தின் மெய்ப் பொருளாம், பேதமும் பேதத்தின் மார்க்கமு மார்க்கப் பிணக்கறுக்கும், போதமும் போத வுருவாகி யெங்கும் பொதிந்தவிந்து, நாதமு நாதவண் டார்க்கும் வெண்டாமரை நாயகியே.

(பொ-ரை.) நாதரூபமாகி வண்டுகள் பாடிக்கொண் டிராநின்ற வெண்டாமரையில் வீற்றிராகின்ற சரஸ்வதிக்கு உருவம் எவையென்னில், வேதமும், உபநிஷத்தும், அதில் மெய்

யாய்விளங்கும் பொருளும், அதனைப் பலர்பிரித்துச் சொல்லும் பேதமும், அந்தப் பேதவழி நூல்களும், அந்நூல்களின் வித்தியாசத்தைப் போக்குகின்ற அறிவும், அறிவுருவாகி யெங்கும் வியாபித்திருக்கின்ற விந்துநாதமுமேயாம் (எ-று.)

(ப-ம்.) "விந்துநாதம்" என்பவற்றை குருமுகத்திலறிக. "வெண்டாமரை" என்பதற்கு வடமொழி "புண்டரீகம்" விசேஷவுரையெழுதில் பெருகும். (கசு)

நாயக மான மலரக மாவது ஞானவின்பச்
சேயக மான மலரக மாவதுந் தீவினையால்
ஏயக மாற்றி விடுமக மாவது மெவ்வுயிர்க்குந்
தாயக மாவதுந் தாதார் சுவேத சரோருகமே.

(பொ-ரை.) சிரேஷ்டம் பொருந்திய பலவகைப்பட்ட புஷ்பங்களும் அடைவதற்குத்தக்க யோக்கியமாக விளங்குவதும், ஞானத்தாலாகிய சுகநிறைந்து விஸ்தாரமாயிருக்கின்ற அடியார்களுடைய இருதய கமலமாவதும், பூர்வஜென்மத்தில் செய்த தீவினைகளாலாகிய எல்லாக்கொடிய பாவங்களையு மகற்றிவிட்டு விளங்காநின்ற மோக்கமாவதும், பலவகைச் சீவராசிகளு மடைவதற்கு அன்புள்ளதாய் வீடுபோல்வதும். எதுவென்றால் உலகமாதா எழுந்தருளி, தாதுக்களடர்ந்து வெண்மை பொருந்தி விளங்காநின்ற தாமரைமலரேயாம் எ-று.

(ப-ம்.) மலர், உயிர், என்பவை முதனிலைத் தொழிலாகுபெயர்கள். "மலர்" எனப் பொதுப்படக்கூறி யதனால் நால்வகை மலரையுங் கொள்க. (கரு)

சரோருக மேதிருக் கோயிலுங் கைகளுந் தாளிணையும், உரோருக முந்திரு வல்குலு நாபியு மோங்

கிருள்போல், சிரோருகஞ் சூழ்ந்த வதனமு நாட்டமுஞ் சேயிதழும், ஒரோரு மீரரை மாத்திரையான வுரைமகட்கே.

(பொ-ரை.) கலைஞானங்களி னுருவமாய்த் தோன்றிய சரஸ்வதிதேவி எழுந்தருளியிருக்குஞ் சிறந்த ஆலயமும், (அவ்வுலக மாதாவினுடைய) இரண்டு கைகளும், இரண்டு பாதங்களும், மார்பிடமுவமுழுதுங் கவர்ந்து தோன்றிய உபயஸ்தனங்களும் சிறந்த கடிதடமும், உந்திச்சுழியும், மிக்கிருள்போலக் கறுத்த அளகபாரஞ்சூழ்ந்த முகமும், கண்களும், அதரங்களும், தாமரைப்புஷ்பமாகவே விளங்குகின்றன. மேற்சொல்லிய ஒவ்வொரு அங்கமும் ஒவ்வொருமாத்திரைகொண்ட மந்திராக்ஷர முடிவுகளை யுடையனவா யிருக்கின்றன (எ-று.)

(ப-ம்.) உறுப்புகள் ஒவ்வொரு மாத்திரைகொண்டிருக்கும் விபரத்தை ஆசாரியன் முகத்தி லறிந்துகொள்க. இது முதனிலைத்தீவகஅணி. "நாட்டம" தொழிலாகுபெயர். "கோயில்" இலக்கணப்போலி. (கசு)

கருந்தா மரைமலர் கட்டா மரைமலர் காமருதாள், அருந்தா மரைமலர் செந்தா மரைமல ராலயமாம், தருந்தா மரைமலர் வெண்டா மரைமலர் தாவிலெழில், பெருந்தா மரைமணக் குங்கலைக் கூட்டப் பிணைதனக்கே.

(பொ-ரை.) அழிவில்லாத அழகுநிறைந்த பெரிய தாமரை மலரின் திவ்வியமணம்வீச, கலாடவியில் சஞ்சரிப்பவளாயும், பார்வையினுல் பெண்மான் போன்றவளாயுமுள்ள உலகமாதாவுக்கு, பெருமை பொருந்திய தாமரைமலரோ கண் தாமரையா

கும், ஒளிநிறைந்த பாதாரவிந்தமே செந்தாமரை மலராகும், எழுந்தருளியிருக்குங் கோவிலாகிய மேன்மையைத் தராநின்ற தாமரைமலரோ புண்டரீகமாகும் (எ-று.)

கட்டாமரைமலரோ கருந்தாமரை மலரெனவும், செந்தாமரை மலரோ காமருதாளருந் தாமரை மலரெனவும, வெண்டாமரை மலரோ ஆலயமாந்தருந் தாமரைமலரெனவும், மாற்றிப்பொருள் கொள்ளினும் அமையும்.

(ப-ம்.) க்ருமை=பெருமை. "தாவிலெழில்" என்றதனால் சகஸ்திரதளம் பொருந்தி எக்காலத்தும் வாட்டமின்றிவிளங்கு கின்ற மலரெனக்கொள்க. உத்தமஸ்திரிகளின் உடலில் இயற் கையில் பூமணமிருக்கும். இதற்குச்செய்யுள்—நைடதம், கலி விருத்தம்.—நீங்கரிய கூலமணி நீண்மறுகுதோறும், மாங்குயி லின் மென்குதலை மங்கைபகர்மாதர், தேங்கம ழுயிர்ப்பின்விரை சேர்த்தினர்கள்விற்கும், கோங்குமலர்சண்பகமென் கோதை யினுங் கொள்வார். (கஎ)

தனக்கே துணிபொரு ளென்னுந்தொல் வேதஞ் சதுர்முகத்தோன், எனக்கே சமைந்த வபிடேக மென்னு மிமையவர்தாம், மனக்கேத மாற்று மருந் தென்ப சூடு மலரென்பன் யான், கனக்கேச பந்திக் கலைமங்கை பாத கமலங்களே.

(பொ-ரை.) கனத்த கூந்தலின்வரிசைபொருந்தி, சகல கலை ஞானங்களினுருவமாய்த் தோன்றிய சரஸ்வதிதேவியின் திருவ டித்தாமரைகளை, பழமையாகிய நான்குவேதங்களும் வருந்தி உழந்து கண்டு தங்களுக்குள் நிச்சயித்த பொருளென்று சொல்லும், நான்குமுகத்தையுடைய பிரமதேவனானவன் தன க்குச் சிரோபாதபரியந்தம் குளிர்ச்சிசெய்விக்க உண்டாக்கிய

அபிஷேகமென்று சொல்லுவான், இமையா நாட்டம்பெற்ற தேவர்கள் தங்கள் மனதின்கணுண்டாகிய சந்தேகவிபரீதமாகிய மரணங்களைப் போக்குகின்ற அமிர்தமென்று சொல்லுவார்கள். யானோ எனது முடிக்கணியத்தக்க திவ்விய பரிமளந் தங்கிய மலர்களென்றுசொல்லுவேன் (எ-று.)

(ப-ம்.) "தனக்கு" தொடைநோக்கிப் பன்மையிலொருமை வந்த வழுவமைதி. அபிடேகஞ்செய்யும்பொருளை அபிடேகமாகக் கூறியது ஓர் உபசாரவழக்கு. ஸேகம்=நனைக்கிறது. அதற்குமேலோர்வகைப் பிரத்தியஞ்சேர்ந்து "ஷேகம்" என்றாயிற்று. "அபி" ஓர் உபசர்க்கம். "என்னும்" இதை நன்னூல் "பல்லோர்படர்க்கைமுன்னிலைதன்மையிற், செல்லாதாகுஞ்செய்யுமென்முற்றே" இச்சூத்திரத்தாலுணர்க. மனக்கேதம், கனக்கேசம், பந்திக்கலை, இவைகளில் ஒற்றுகள் விகாரத்தால்விரிந்தன. இமையில்லாதவரை இமையவர் என்பது மங்கலம். பாதத்தை அமிர்தமாக வுருவகஞ்செய்தமையால் "மனக்கேதமாற்றுமருந்து" என்பதில் "கேதம்" என்பது மரணம் எனப் பொருள்கொள்ளப்பட்டது. சரஸ்வதியையே பலவாறாகக் கூறியதனால் இது பலபடப்புனையணி. (௪அ)

கமலந் தனிலிருப் பாள்விருப் போடங் கரங்குவித்துக், கமலங் கடவுளர் போற்றுமென் பூவை கண்ணிற் கருணைக், கமலந் தனைக்கொண்டு கண்டொருகாற்றங் கருத்துள் வைப்பார், கமலங் கழிக்குங் கலைமங்கை யாரணி காரணியே.

(பொ-ரை.) சரஸ்வதி, வேதத்தினிறைந்தவள், சகலவஸ்துக்களு மாவதற்குக் காரணமாயிருப்பவள், அழகிய வெண்டாம

ரைமலரின் கண்ணே வீற்றிருப்பவள். தாமரைப் புஷ்பத்தின் கண்ணே யெழுந்தருளியிருக்கின்ற பிரமதேவர் நீங்காவிருப்ப த்தோடு அழகியகரங்களைக்குவித்து வந்தனைசெய்யத்தக்க மெல்லியகுணமுடைய நாகணவாய்ப் பக்ஷியின்வார்த்தையையொத்த வார்த்தையினையுடையாள் எழுந்தருளியிருக்கின்ற கருணை வடிவாகிய சகஸ்திர தளகமலத்தை [சரஸ்வதிபீடத்தை] கண்களால்கண்டு ஒருதரம் தங்கள் மனதில்வைத்துத் தியானிப்பவரது நிறைந்தபந்தத்தைப் போக்குவாள் எ-று.

கண்டுகருத வேண்டுமென்பது கருத்து.

(ப-ம்.) "கமலங்கடவுளர்" வல்லொற்று மெல்லொற்ருகியது ஆண்டு "திசைநான்முகன்றேவியையே" என்று பிரமதேவருக்கு சரஸ்வதியைத் தேவியாகக் கற்பித்ததும் ஈண்டு "அத்திசைமுகன்கரங்குவித்து வணங்குமென்றதையும்" ஆராய்ச்சிசெய்யுங்கால், தலைவன் தலைவியை வணங்குகிறதாகக் கூறியிருப்பது இறும்பூதிறும்பூது, பிரபுலிங்கலீலை. — "ஆதிபகவன்றன தாடறணிப்பான்டணிய வவ்விறைவன், பாதமிறைஞ்சு மதற்கு நெற்றிப் பகையுமல்குற்டகையுமாம், சீதமதியுமரவும் விழுஞ்செயற்கு முவகை செயாமலலை, மாதுபணியுமதற்கு மனமகிழுமுமையை வணங்குவாம்" சௌந்தரியலகரி.—"மறுமடந்தையை மொழியசின்பத மலர்வெகுண்டர னுதலிலேர், முறையறைந்திடவிழியினும்ப்டமுதுபழம்பகைகருதிவே, ளிறையை வென்றனன்விழியைவென்றனனெனமுழங்கியகுரலெனு, தறைசிலம்பெழு மரவமென்பதெனருணமங்கலகமலையே". ஆண்டு அங்ஙனங்கூறினும் ஈருருவம் ஒருருவாய் வேற்றுமையின்றிக் கூறினமையை இவ்விருத்தங்களாலுணர்க. "கடவுள்" தொழிலடியாய்ப்பிறந்தபேர். "கட" பகுதி. "உள்" தொழிற்பெயர் விகுதி. "அர்" பெயர்விகுதி. பொருள் செலுத்துகின்றவர். ()

காரணன் பாகமுஞ் சென்னியுஞ் சேர்தரு கன்னியரும், நாரண னுக மகலாத் திருவுமோர் நான்மருப்பு, வாரணன் றேவியு மற்றுள்ளதெய்வ மடந்தையரும், ஆரணப் பாவை பணித்தகுற் றேவ லடியவரே.

(பொ-ரை.) அகிலலோக காரணனுகிய பரமேசுவரனுடைய இடப்பாகத்தினையும், சிரசினையும், அடைந்திராநின்ற பார்வதிதேவியும், கங்காதேவியும், மகாவிஷ்ணுவினுடைய மார்பிடம் பிரியாத இலக்குமிதேவியும், கூர்மைபொருந்திய நான்கு கொம்பினையுடைய ஐராவதம் என்னும் வெள்ளையானையை நடாத்துகின்ற தேவராஜாவின் மனைவியாகிய ஐராணிதேவியும், மற்றுள்ள தேவர்கணத்துத் தேவிமார்களும், வேதவுருவாய் விளங்காநின்ற சரஸ்வதிதேவியானவள் திருவாய்மலர்ந்தருளிய சிற்றேவல்கேட்கும் அடியவராவார்கள் (எ-று.)

(ப-ம்.) "கன்னி" என்பது 'இளமை" "நாராயணன்" என்றது "நாரணன்" என்று தொடைநோக்கிவந்தது. நாராயணன்=(க) அவதாரங்களில் நரசரீரத்தை யடைகிறவர்; (உ) ஜலத்தை ஸ்தானமாகவுடையவர்; (௩) நரர்களின் கூட்டத்துக்கு ஸ்தானமானவர்; (௪) நரர்களின் கூட்டத்தை ஸ்தானமாகவுடையவர்; (௫) சப்தரூபம் பிறக்கக் காரணமானவர்; (௬) சப்தரூபமானவர்; இன்னும் பலபொருள்களுமுள. "பாவை" உவமையாகுபெயர். (௨0)

அடிவேத நாலுஞ் சிறப்பார்ந்த வேத மனைத்தினுக்கும், முடிவே தவள முளரியின் னேமுடி யாவிரத்தின, வடிவே மகிழ்ந்து பணிவார் தமது மயலிரவி

ன், விடிவே யறிந்தென்னை யாள்வார் தலந்தனில் வேறிலையே.

(பொ-ரை.) மேலானவர்கள் அறியத்தக்கவையாகிய உனது திருவடித்தாமரை மணம் வீசுகின்ற சிறந்த பலவேதங்களுக்கும் வேதாந்தமாக விளங்குகின்றவளே, வெண்மைநிறம்பொருந்திய தாமரையின்கண் வீற்றிராநின்ற மின்னலின் சாயைபோலுஞ் சாயையுடையாளே, எப்புறமுந்தோன்றி விளங்குகின்ற அரதன ஒளியைப்போன்ற ஒளியினையுடையாளே, உனது தெரிசனங் கிடைத்ததென்று மகிழ்ந்து பூரிப்புடைந்து திரிகரண சுத்தியாய் வணங்கப்பட்டவர்களுடைய மயக்கமாகிய இரவு அகலும்படி தோன்றுகின்ற உதயகாலமே, இப்பூவுலகின்கண்ணே மலமாயா சம்மந்தமாயிராநின்ற என் தன்மையையறிந்து அவைகளைப்போக்கி யெடுத்து அடிமைகொள்பவர் நின்னைத் தவிர வேறில்லை (எ-று.)

(ப-ம்.) வெளிப்படை. (உக)

வேறிலை யென்று னடியாரிற் கூடி விளங்குநின் பேர், கூறிலை யாயினுங் குறித்துநின் றேனெம் புலக்குறும்பர், மாறிலை கள்வர் மயக்காம னின்மலர்த் தாணெறியில், சேறிலை யீந்தருள் வெண்டா மரைமலர்ச் சேயிழையே.

(பொ-ரை.) வெண்மைபொருந்திய தாமரை மலரின்கண்ணே வாசஞ்செய்கின்ற சிவந்த ஆபரணங்களையணிந்த சரஸ்வதியே நின்னைத்தவிர யெனக்கு வேறே யாதாரமில்லையென்று நிச்சயித்து உனது மெய்யடியாரோடு கூடி நினது திருநாமங்களி லொன்றையானும் சொல்லித் துதித்திராதவனுகிய யானும் ஈண்டு நின்னையே தெய்வமாகக்குறித்து நிற்கின்றேன்.

ஆதலின் ஒலிமுதலிய ஐம்புலதுஷ்டர்களாகிய உலோபக்கள் வர்கள் என்னை மயக்காதிருக்கும்படி நன்னெறியா லடையத் தக்க பரிசுத்தமுள்ள வீடாகிய நினது பாததாமரையை அடி யேற்கு ஈந்தருள்வாயாக (எ-று.)

(ப-ம்.) ஐம்புலன், சப்த பரிச ரூப ரச கந்தம். தீயோர் பெருநெறியில் செல்வோரை அருநெறியிற்போக்கி அவரதுபொருள் பறிப்பதுபோல நன்னெறியிற் செல்வோரை தீநெறியிற் போக்கி அறிவைக் கொள்ளைகொள்கின்றமையால் "ஐம்புலனை" குறும்பரென்றார். (௨௨)

சேதிக்க லாந்தர்க்க மார்க்கங்க ளெவ்வெவர் சிந்தனையும், சோதிக்க லாமுறப் போதிக்க லாஞ்சொன்ன தேதுணிந்து, சாதிக்க லாமிகப் பேதிக்க லாமுத்தி தானெய்தலாம், ஆதிக்க லாமயில் வல்லி பொற்றாளை யடைந்தவரே.

(பொ-ரை.) வெளிப்படை.

(ப-ம்.) சேதித்தல்=அழித்தல். தர்க்கம் = யூகித்தறிதல். முக்தி=விடுபடுதல், அஃதாவது பாசபந்தம் நீங்குதல். (௨௩)

அடையாள நாண்மல ரங்கையி லேடு மணிவடமும், உடையாளை நுண்ணிடை யொன்று மிலாளை யுபநிடதப், படையாளை யெவ்வுயி ரும்படைப் பாளைப் பதுமநறும், தொடையாளை யல்லது மற்றினி யாரைத் தொழுவதுவே.

(பொ-ரை.) தன்னடியார்களறிந்து வணங்கக் குறியாகக் கொண்ட அன்றலர்ந்த தாமரைமலர்போன்ற அழகிய கைகளினிடத்தே புஸ்தகமும், ஜெபசரமுமுடையாளை, சந்தேகிக்கும்

படி நுட்பமான இடையையுடையாளை, உபநிடதங்களை ஆயுத மாகவுடையவளை, சகல ஆத்மாக்களையுஞ் சிருஷ்டிசெய்பவளை, தாமரைமலராலாகிய பரிமளமிகுந்த மாலையையுடையாளை, அல்லாமல் வேறு யாரைவணங்குவது (எ-று.)

அவ்வுலகமாதாவை வணங்கவேண்டுமென்பது இசையெச்சம்.

(ப-ம்.) "அங்கையிலேடுமணிவடமும்" என்றதை "புத்தகம் படிகமாலை" என்ற கவியாலுணர்க. உபநிடதம் என்றது நான்கு வேதங்களினின்றும் விசேஷமுடையவைகளாய்த் திரட்டிய சீருத்திரம், பிரகாதாரணியம், சுவேதாசுவதரம், கைவல்லியம், காலாக்கினி, கடம், வல்லி, காத்தியாயனம், பிரமம், நாராயணம், அங்கிசம், பரமாங்கிசம், பாற்கரம், பிரமவிந்து, ஆருணி, அமிர்தபிந்து, பகுவபஞ்சம், பிரமசாபாலம், தேஜோபிந்து, வார்சியாநீயம், போதாயநீயம், ஆசுவலாயநீயம், சாங்கியாயநீயம், வாசிராயநீயம், சௌனகியம், சிவசங்கற்பம், சிரவணம், பாரகம், கிம்புரோடியம், மாண்டூகம், முண்டிரம், மௌண்டிரம், இம் முப்பத்திரண்டெனக்கொள்க. இவைகளுக்கு வெவ்வேறுபெயருமுண்டு. "உபநிடதம்" இதன்சப்தார்த்தம் "சமீபித்திருக்கிறது". (உச)

தொழுவார் வலம்வரு வார்துதிப் பார்தந் தொழிலின் மறந்து, விழுவா ரருமறை மெய்தெரி வாரின்ப மெய் புளகித், தழுவா ரினுங்கண்ணி னீர்மல்கு வாரென்க ணுவதென்னை, வழுவாத செஞ்சொற் கலைமங்கை பாலன்பு வைத்தவரே.

(பொ-ரை.) பிரசங்கிக்குங்கால் தவறாத செஞ்சொல்லாலாகிய பிரபந்தவுருவமாய்த்தோன்றிய உலகமாதாவாகிய சரஸ்

வதியினிடத்தில் அன்புவைத்தவர்கள் அவனையேநினைந்து வண ங்குவார்கள், பிரதக்ஷிணஞ்செய்வார்கள், ஸ்தோத்திரஞ்செய் வார்கள், தங்கள் செய்கைமறந்துவிழுவார்கள், அருமைபொ ருந்திய வேதத்தினுண்மைப் பொருளை யாராய்வார்கள், அப் படி ஆராய்ந்தறிந்ததினால் இன்பமடைந்து உரோமஞ்சிலிர்த்து அழுவார்கள்; யானுமடியானெனப் பெயர்கொண்டிருக்க என் னிடத்து அன்புகாரணமாகிய அத்தொழில்கள் யாதொன்று மில்லை (எ-று.)

(ப-ம்.) நீதிநெறிவிளக்கம் "நெடும்பகற்கற்றவவையத்துத வா, துடைந்துளாருட்சூழவருங்கல்வி—கடும்பகல், ஏதிலான்பாற் கண்ட வில்லினும் பொல்லாதே, தீதென்றுநீப்பரிதால்" இவ்வெ ண்பாவில் கூறியபடி வருதல்நோக்கி "வழுவாதசெஞ்சொல்" என்றார். தேவரிடத்து அன்புள்ளோர்க்கு மேற்சொல்லியகுண ங்கள்தோன்று மென்பதை, உபநிடதம், "முத்தனையும்பெத்த னையுமகக் குறியானகக்குறியான் முழுதுந்தேரின், மெத்தெ னவாகிய மொழியு மானந்தபரவசத்தால் மிகுந்தசோர்வும், சித்தநிலைதிரியாத செல்வருமாயிருப்பர் நல்லோர்தீயோரெல் லாம், இத்தகைமையோர்களையே யிகழ்ந்து புகழ்ந்தோர்க்குற வாயிருப்பர்தாமே" இத்திருவிருத்தத்தாலறிக. "என்னை"இதிலு ள்ளஐகாரம் நன்னூல் "ஐயாயிகரவீற்றமூன்று" என்றசூத்திர த்தால் ஏவலில்வந்தது. "சொல்" ஆகுபெயர். (உ௫)

வைக்கும் பொருளுமில் வாழ்க்கைப் பொருளும
ற் றெப்பொருளும், பொய்க்கும் பொருளன்றி நீடு
ம்பொருளல்ல பூதலத்தின், மெய்க்கும் பொருளு
மழியாப் பொருளும் விழுப்பொருளும், உய்க்கும்
பொருளுங் கலைமா னுணர்த்து முறைப்பொருளே.

(பொ-ரை.) பூமியினிடத்தில் வைத்த புதைப்பொருளும், இல்லற நடாத்துதற்குரிய பொருள்களும், பலவகைப்பட்ட செல்வப்பொருளும், பொய்யாகப்போகும் பொருளேயல்லாமல் நிலைநிற்கும் பொருளல்ல நீடித்துநிற்கும் பொருள்கள் எவையென்னில் பலர் மெய்ச்சிக்கொள்ளும்படியான கல்விப்பொருளும், நாடோறும் வளர்ந்தேறிவராநின்ற கீர்த்திப்பொருளும், மேன்மை பொருந்திய ஞானப்பொருளும், மோக்ஷத்திற் செலுத்துகின்ற முயற்சிப்பொருளுமாகிய சகல சாஸ்திரங்களுக்குந் தலைவியாய் வீற்றிராநின்ற சரஸ்வதி தேவியார் ஆத்மாக்களிடத்தில் வைத்த அன்பாலருளிய வேதத்தின்பொருளேயாம் (எ-று.)

(ப-ம்.) அழியாப்பொருள் என்பதில் "அழியா" ஈறுகெட்ட பெயரொச்சம். (உசு)

பொருளா விரண்டும் பெறலாகு மென்ற பொரு
ள்பொருளோ, மருளாத சொற்கலை வான்பொரு
ளோபொருள் வந்துவந்தித், தருளாய் விளங்கு மவ
ர்க் கொளி யாயறி யாதவருக், கிருளாய் விளங்கு
நலங்கிளர் மேனி யிலங்கிழையே.

(பொ-ரை.) மிகுந்த பக்தியோடு வந்து நமஸ்கரித்து பூர்வ ஜென்மத்தில்பெற்ற நினது கிருபையினால் விளங்காநின்ற அடியார்களுக்குத் திவ்விய தேஜசுவையுடைய கோடிசூரியப் பிரகாசமாயும், அஞ்ஞானமுள்ளவர்க்கு இருளுருவமாயும் விளங்குகின்ற நன்மை ஒளிர்கின்ற சரீரத்தில் விளங்கு மாபரணங்களை யணிந்த சரஸ்வதிதேவியே, உலகத்தி லறிவுள்ளோர்வகுத்த அறம், பொருள், இன்பம், இம்மூன்றில் நடுநின்ற செல்வப்பொருளினால் இருபாலுமுள்ள அறத்தினையு மின்பத்தினையு மடைய

லாமென்று சொல்லிய பொருளானது மேலான பொருளாகுமோ, மருட்சியைத்தராத கீர்த்திநிறைந்த கல்வியானபொருளோ சிறந்த பொருள் (எ-று.)

உரைத்தருள வேண்டுமென்பது இசையெச்சம்.

(ப-ம்.) 'மருள்' என்பது 'சந்தேகவிபரீதம்'. தன்னையுந் தன்னிடத்துள்ள பொருளையும் விளக்குதலால் "ஒளி" என்றார். "இலங்கிழை" வினைத்தொகையடியாகப் பிறந்த அன்மொழித்தொகை. பொருளாலிரண்டு பெறலாமென்பதை, நாலடிநானூறு. "வடுவிலாவையத்துமன்னியமூன்றின், நடுவணதெய்த விருதலையுமெய்தும், நடுவணதெய்தாதானெய்துமுலைப்பெய், தவதுபோலுந் துயர்" இவ்வெண்பாவாலறிக. சாரதாம்பாளொருத்தியே சிலருக்கு ஒளிவுருவாயும், சிலருக்கு இருளுருவாயும் தோற்றுவ தெங்ஙனமென்னில். நீதிவெண்பா. "மந்திரமுந்தேவு மருந்துங் குருவருளும், தந்திரமுஞானந்தருமுறையும்—எந்திரமும், மெய்யென்னில்மெய்யாய் விளங்குமேமேதினியில், பொய்யென்னில் பொய்யாகிப் போம்" இவ்வெண்பாவின்படி அவரவர்கள் எண்ணம்போல் விளங்குவாளென்றது. (உஎ)

இலங்குந் திருமுக மெய்யிற் புளக மெழுங்கண்கணீர், மலங்கும் பழுதற்ற வாக்கும் வலிக்கும் மனமிகவே, துலங்கு முறுவல் செயக்களி கூருஞ் சுழல்புனல்போல், கலங்கும் பொழுது தெளியுஞ் சொன்மானைக் கருதினர்க்கே.

(பொ-ரை.) உலகமாதாவைத் திரிகரணசுத்தியாகத் தியானித்தவர்களுடைய அழகிய முகமானது ஒளிசெய்யும், சரீரமானது புளகிக்கும், கண்கள் நீரால்கலங்கும், குற்றமற்றவாக்கானது துதிக்கும், மனமானது மேன்மேலும் பிரகாசிக்கும்,

அடியார்கள் நகைத்தலினுல் மகிழ்ச்சியடையும், சுழலோடுவரு கின்ற புதுப்புனல்போலக் கலங்கும், உடனே தெளிவுபெறும் (எ-று.)

(ப-ம்.) நன்னூல். "சொற்றிரியினும் பொருடிரியா வினைக்குறை" இச்சூத்திரவிதியால் செய என்பதை செயின் என்று கொள்க. (உ௮)

கரியா ரளகமுங் கண்ணுங் கதிர்முலைக் கண்ணுஞ் செய்ய, சரியார் கரமும் பதமு மிதழுந் தவளநறும், புதியார்ந்த தாமரை யுந்திரு மேனியும் பூண்பனவும், பிரியாதென் னெஞ்சினு நாவினு நிற்கும் பெருந்திருவே.

(பொ-ரை.) பெருமையிற்சிறந்து அழகின்மலிந்த சரஸ்வதியே, உன்னுடைய கருமைநிறைந்த கூந்தலும், கண்களும், பருத்த குசுகங்களும், சிவந்த பொன்னுலாகிய வளையலணிந்த கரங்களும், பாதங்களும், அதரங்களும், எழுந்தருளிய சகஸ்திர தவள தாமரையும், திருமேனியும், அணியுமாபரணங்களும், எப்பொழுதும் பிரியாமல் அறிவிற்சிறிய எளியேனுடைய மனத்தின்கண்ணும் நாவின்கண்ணு நின்று நினைப்பூட்டும் (எ-று.)

(ப-ம்.) "அளகம்" என்றது சுருண்டரோமம், காரணத்தைக் காரியமாகக்கூறுவது தமிழ்நடை வழக்காதலின், ஈண்டுமனம் நினைத்துக்கொண்டும் நாதுதித்துக்கொண்டும் இருக்குமென்று கூறுது மேற்சொல்லிய அங்கங்கள் அவ்விரண்டையும் விட்டுப் பிரியாவெனக்கூறினர். அற்றேல் "பொன்போலுமிலங்குமனஞ் சஞ்சலத்தாற் குரங்காம்"என்ற உயர்ந்தோர் மொழியோடு மாறுகொள்ளச் சதாநினைக்கும் என்றதென்னை? பட்டணத்துச்சுவாமிகள் திருப்பாடல். "எத்தொழிலைச்செய்தாலு மேத

வத்தைப்பட்டாலும், முத்தர்மனமிருக்கு மோனத்தே—வித்தக மாய்க், காதிவிளையாடியிரு கைவீசிவந்தாலும், தாதிமனம்நீர்க் குடத்தே தான்" இவ்வெண்பாவாலறிக. "திரு" ஆகுபெயர். ()

பெருந்திரு வுஞ்சய மங்கையு மாகியென் பேதை நெஞ்சில், இருந்தரு ளுஞ்செஞ்சொல் வஞ்சியைப் போற்றிலெல் லாவுயிர்க்கும், பொருந்திய ஞானந் தருமின்ப வேதப் பொருளுந்தரும், திருந்திய செல் வந் தருமழி யாப்பெருஞ் சீர்தருமே.

(பொ-ரை.) பெருமையிற் சிறந்த இலக்குமிதேவியாகியும், வீர இலக்குமியாகியும், பேதைமைநிறைந்த எளியேன் மனத்தின் கண் குடியிருந்தருள்கின்ற செஞ்சொல்லா லாகிய பாமாலை யணிந்து கொடியைப்போல் விளங்காநின்ற சரஸ்வதிதேவியா ரைவணங்கினால், அவ்விதமாக வணங்கிய ஜீவர்களுக்குப் பொ ருத்தமாகிய நல்லறிவினைத்தருவாள். ஓதுதலினால் ஆனந்த த்தைத் தராநின்ற வேதத்தின் மெய்ப்பொருளைத்தருவாள். எல் லாரும் விரும்பத்தக்க ஐசுவரியத்தைத்தருவாள், ஒருகாலத்தி லுமழியாத பெரியசீரையுந் தருவாள் (எ-று.)

(ப-ம்.) குறள் "தவமுந்தவமுடையார்க்காகுமவமதனை, அஃ திலார்மேற்கொள்வது" என உயர்ந்தோர் செய்யுளோடு மாறு கொள்ளாது முற்பிறப்பிலேயே தவஞ்செய்தவர்க்கே இப்பிற ப்பில் தவம் பலிக்கும் எனத் தெரிவிப்பார் "போற்றில்" என வருங்காலத்தாலும் இம்மையிலடையவேண்டிய, அறிவு, கல்வி, செல்வம், சீர், இவைக ளொன்றிலொன் றதிகமென்பது தோ

ன்ற முறைசெய்துவைத்தும் முடித்தார். அன்றியும் "திருந்திய செல்வம்" என்றதற்கு மேற்சொல்லிய வேதப்பொருளை அடிக் கடிபழகுந் தன்மையெனினும் அல்லது கடவுளையறியுந் தன்மை யெனினும், "சீர்" என்றதற்கு "முக்தி" எனினுமமையும். (௩O)

சரஸ்வதியந்தாதி மூலமும் உரையும்

முற்றிற்று.
